விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 170 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 233 வியாழக்கிழமை (06.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



8ஆம் திகதி
பாரதப் பிரதமராக மோடி பதவியேற்பு
8ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்ப் பொது வேட்பாளர் பயனற்ற திட்டமாகும்

## ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற திட்டம் பயனற்றது என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## அத்தியாவசிய சேவைகள்
### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மின்சார விநியோகம், எரிபொருள் வழங்கல் உள்ளிட்ட சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டு அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள் 15

## நயினைத் தாய்க்கு நாளை கொடியேற்றம்



16

## தியாகி பொன்.சிவகுமாரனின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல்
### யாழ்.பல்கலையில் அனுஷ்டிப்பு



15

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும்
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலை ஒதுக்கிவிட்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட் 15

## இலங்கையுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பு
### பாரதப் பிரதமர் மோடி



(புதுடில்லி)

இந்தியப் பொதுத் தேர்தலில் தமது கூட்டணி வெற்றி பெற்றுள்ள நிலையில், இலங்கையுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிதெரிவித்துள்ளார்.

தனது வெற்றியைத்தொடர்ந்து வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் 15

## யாழில் இடம்பெற்ற 2ஆவது தமிழ் மக்கள் பொதுச் சபைக் கூட்டம்



15

## புங்குடுதீவில் இளம் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு மடத்துவெளி வயலூர் முருகன் ஆலய கிணற்றிலிருந்து இளம்பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட் 15

## சீரற்ற காலநிலையால் மரணித்தோர் எண்ணிக்கை 30ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையினால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை நேற்று காலை 30 ஆக உயர்ந்துள்ள தாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, உயிரிழந்தவர்களின் குடும் 15

## போலி விசாவில் கனடா செல்ல முயன்ற யாழ்.இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

போலி விசாவைப் பயன்படுத்தி கனடா செல்ல முயன்ற 34 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

EY-395 Etihad Airlines விமானத்தில் செல்வதற்காக இளைஞன் நேற்று அதிகாலை 04.30 மணியளவில் கட்டுநாயக்க 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## வியாபார நிலையங்களில் கட்டணக் கழிவகற்றல் சேவை - 2024/2025

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்கு கட்டண கழிவகற்றல் சேவை ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு சேவை வழங்குநரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேவைவழங்குநர்கள் விண்ணப்ப படிவங்களையும் சேவை நிபந்தனைகளையும் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 07.06.2024 தொடக்கம் அலுவலக நேரத்தில் பிற்பகல் 3.00 மணி வரைக்கும் 20.06.2024 திகதி நண்பகல் 12.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 20.06.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் கேள்விச்சபையால் நிராகரிக்கப்படும்.

சித்திகர கேள்விதாரர் ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100,000.00 பணமாக செலுத்துதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 20.06.2024ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் இடம்பெறும். கேள்விச்சபையின் தீர்மானமே இறுதியானது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**யாழ் மாநகர சபை.** (C-0533) **06.06.2024**


## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. (1114)

**076 437 5404**



**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**


# நன்றி கூறுகின்றோம்

சங்கிலி மன்னனின் 405 வது சிரார்த்த தின நினைவேந்தல் நிகழ்ச்சிகள் சிறப்புற நடந்தேற, நிதியன்பளிப்புச் செய்திருந்த

**திரு. A.கிருபாகரன்**
(முதல்வர் கிருபா லேணேர்ஸ்),
**டாக்டர்.திரு.பொ.கேசவராஜா**
(இயக்குநர், நொதேன் வைத்தியசாலை),
**கொடைவள்ளல் E.S.P.நாகரத்தினம்**
(தொழிலதிபர், கஜன் மோட்டோர்ஸ்),
**திரு.ந.திவாகர்**
(தொழிலதிபர், அண்ணா தொழிலகம்),
**திரு.S.சண்முகானந்தன்**
(தொழிலதிபர், ராஜா கிறீம் ஹவுஸ்),
**திரு.P.குகதாசன்**
(றொலக்ஸ் உணவகம்),
**திரு.கு.கங்கைவேணியன்**

ஆகிய யாழ் வர்த்தகப் பெருமக்களிற்கு இலங்கை சிவசேனை மிகுந்த நன்றியினைத் தெரிவிக்கிறது.

**சிவத்தொண்டர் N.P.ஸ்ரீந்திரன்**
**இலங்கை சிவசேனை**

(C-0536)

# INVITATION FOR BID (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
## DELFT PRADESHIYA SABHA
## WORLD BANK AND EU FUNDED
## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Loan & Grant from the World Bank & European Union towards the cost of **Local Development Support Project (LDSP)** and intends to apply part of the proceeds of this credit to payment under the contract for construction works as stated in the table below.
2. The chairman, local Authority Procurement Committee on behalf of the **Pradeshiya Sabha, Delft, Northern Province,** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost Rs.(Mn) | Contract Period (Days) | Required CIDA Grade & specialty | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | LDSP/NP/JAF/DPS/2023/PT2/01 | Expansion of Indoor Play Area at Delft centre | 10.11 | 90 Days | C6 or Above (Buildings ) | 10-Sep-2024 | 101,000.00 | 21-Oct-2024 |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted by Ministry of finance or World Bank or any other acceptable Institutions. And Domestic Contractors shall have been registered in the field of Building construction for grade mentioned in the table above with the Institute for Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 (Schedule) of the bidding document.
6. Interested eligible bidders may obtain further information from **Secretary, Delft Pradeshiya Sabha, Delft, (Tel.No.0212215211, Fax.0212215211, E-mail: tsecretarydelft@yahoo.com)** on any working day from 09:00 hrs. To 14:00 hrs. 06th June 2024 – 26th June 2024.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below from 06th June 2024 – 26th June 2024 from 09:00 hrs. To 14:00 hrs. On working days upon payment of a non-refundable fee of Rs. 3000.00 for each contract. The method of payment should be by cash.
8. Bids shall be delivered in Original & Copy directly or sent by Registered Post to the address below on or before 14:30 hrs. On 26th June 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a bid security as per the information given in the table above.
10. Pre-bid meeting will be held on 10th June 2024 at 10:30 hrs. In the Pradeshiya Sabha Office, Delft. Interested bidders may attend the meeting at their own expense

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support project (LDSP)**
**Delft Pradeshiya Sabha, Jaffna,**
**Northern Province.**

**06.06.2024** (C-0534)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## திரவக்கழிவகற்றல் சேவை - 2024/2025

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இடங்களில் திரவக்கழிவகற்றல் வாகனத்தினை வாடகைக்கு அமர்த்துவதற்காக ஒரு வருட காலத்திற்கு சேவை வழங்குனரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக் குழு தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன. சேவை வழங்குநர்கள் சேவை நிபந்தனைகள் மற்றும் கேள்விப் படிவங்களை யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 07.06.2024 தொடக்கம் அலுவலக நேரத்தில் பிற்பகல் 3.00 மணி வரைக்கும் 20.06.2024 திகதி நண்பகல் 12.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரிநீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 20.06.2024 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் கேள்விச்சபையால் நிராகரிக்கப்படும்.

கேள்வி திறத்தல் 20.06.2024 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச்சபையின் தீர்மானமே இறுதியானது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**யாழ் மாநகர சபை.** (C-0532) **06.06.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் இதுவரை

## 25,000 பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

### டெங்கு நோய் கட்டுப்பாட்டுப்பிரிவு தகவல்

(கொழும்பு)

**நாட்டின் இந்த வருடத்தின் கடந்த 5 மாதங்களில் மாத்திரம் சுமார் 25 ஆயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் சுமார் 90 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில் இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் 25 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.



ஜனவரி மாதத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ள நிலையில் அதன் பின்னரான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

எனினும் நாட்டில் தற்போது நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

# எதிர்க்கட்சித் தலைவர் வடக்கிற்கு விஜயம்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கும் முகமாக இந்த விஜயம் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரபஞ்சம் திறன் வகுப்பறைகள், கட்சி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் சஜித்தின் இந்த விஜயம் முக்கிய விஜயமாக அமையும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் வடக்கிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இலங்கையில் களமிறங்கும் அவுஸ்திரேலிய நிறுவனம்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் இலங்கையில் தனது எரிபொருள் விநியோக செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

லங்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஊடாக ஜூலை மாத இறுதி அல்லது ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளடங்கலாக 50 இற்கும் மேற்பட்ட புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைக்கவுள்ளதாகவும் குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த திட்டத்திற்காக அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் நிறுவனம் தமது நாட்டுக்கு அடுத்தபடியாக சில்லறை பெற்றோலிய விநியோக செயற்பாடுகளை விரிவுபடுத்தும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தமிழ் பொதுவேட்பாளர் தேவை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

(லண்டன்)

தமிழீழத் தேசியத்தை உலகிற்கு எடுத்தியம்புவதற்கு தமிழ் பொதுவேட்பாளர் தேவை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்று மூன்று தெரிவுகள் இலங்கை தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களிடையே வைக்கப்பட்டுள்ளன.

முதலாவது சிங்களவர்களுடன் பேரம் பேசி எமக்கு அதிக உரிமைகளைத் தருபவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். மற்றையது ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். மூன்றாவது தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடைபெற்று இன்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இன்றுவரை ஒரு சிங்கள புத்திஜீவியோ, ஒரு சிங்கள அரசியல் தலைவரோ, ஒரு சிங்கள மாணவத் தலைவரோ தாங்கள் செய்த பிழையை ஏற்றுக் கொள்ளவும் இல்லை, மன்னிப்பும் கேட்கவும் இல்லை. சிங்களவர்களுடன் பேசிய பேரத்தை இந்தியாவினால் கூட நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனினும் தமிழ் பொது வேட்பாளர் மூலமாக நாங்கள் ஒரு அரசியல் திரட்சியைக் கொண்டு வரலாம், சுய நிர்ணயத்திற்கான திரட்சியையும் கொண்டு வரலாம்" என்றும் உருத்திரகுமாரன் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# தோல்வியில் முடிந்த பேச்சுவார்த்தை

## மீண்டும் போராட்டத்தில் குதிக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கின்றார்.

நிதி அமைச்சில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி முடிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, தமது உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் எதிர்வரும் 12 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். அடுத்த ஆண்டு பாதீட்டு திட்டத்தின் ஊடாக அரச பணியாளர்களின் வேதன பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அதிபர்-ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் வேதன அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும்என வலியுறுத்தப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார். (நி-6)

# மின்சார கட்டண சீரமைப்பு

## உச்ச நீதிமன்றத்தின் திருத்தங்களை ஏற்றது அரசு

(கொழும்பு)

மின்சார கட்டணம் தொடர்பில் உச்சநீதிமன்றம் சமர்ப்பித்த அனைத்து திருத்தங்களையும் ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார சட்ட மூலத்திற்கு எதிரான மனு மீதான விசாரணையில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதன்படி, மின்சார சட்ட மூலத்தின் பல சரத்துக்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானவை அல்ல என்றும், அந்த சரத்துக்கள் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் ஒரு சரத்தும் பொது வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது. குறித்த சட்டமூலம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் கருத்தை முன்வைத்த சபாநாயகர், உரிய சரத்துக்களை திருத்தினால் பாராளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்றார். (நி-6)

# உணவுப் பொதிகளின் விலைகளில் மாற்றம்

(கொழும்பு)

கொத்து ரொட்டி மற்றும் உணவுப் பொதிகள் உள்ளிட்ட சில உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக உணவக உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி கொத்துரொட்டி மற்றும் உணவுப் பொதிகளின் விலை 25 ரூபாயினாலும் முட்டை ரொட்டி 10 ரூபாயினாலும் லட்டு 5 ரூபாயினாலும் குறைக்கப்படவுள்ளன.

மேலும் லிட்ரோ மற்றும் லாப் ஆகிய நிறுவனங்கள் நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வரையில் எரிவாயு கொள்கலன்களின் விலையில் திருத்தம் மேற்கொண்டிருந்த பின்னணியில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஆப்கான் அசத்தல் சுருண்டது உகாண்டா



ஆப்கானிஸ்தான் அணி 125 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெஸ்ட் இண்டீசின் கயானாவில் உள்ள புரோவிடன்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த "ரி-20" உலக கோப்பை "சி" பிரிவு லீக் போட்டியில் ஆப்கானிஸ்தான், உகாண்டா அணிகள் மோதின. "டாஸ்" வென்ற உகாண்டா அணி "பீல்டிங்" தேர்வு செய்தது.

ஆப்கானிஸ்தான் அணிக்கு ரஹ்மானுல்லா குர்பாஸ், இப்ராஹிம் ஜத்ரன் ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. அபாரமாக ஆடிய குர்பாஸ், 28 பந்தில் அரைசதம் எட்டினார். தினேஷ் நக்ரானி வீசிய 6 ஆவது ஓவரில் வரிசையாக 4 பவுண்டரி விரட்டிய இப்ராஹிம், தன்பங்கிற்கு அரைசதம் விளாசினார். முதல் விக்கெட்டுக்கு 154 ரன் சேர்த்த போது இப்ராஹிம் (70) அவுட்டானார். குர்பாஸ் (76) நம்பிக்கை தந்தார். நஜிபுல்லா ஜத்ரன் (2), குல்பதின் (4), அஸ்மதுல்லா ஓமர்ஜாய் (5) சோபிக்கவில்லை.

ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 183 ரன் எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய உகாண்டா அணிக்கு பரூக்கி தொல்லை தந்தார். இவரது "வேகத்தில்" ரோனக் படேல் (4), ரோஜர் முகாசா (0), ரியாசத் அலிஷா (11) வெளியேறினர். நவீன் உல் ஹக் பந்தில் தினேஷ் நக்ரானி (6), அப்பேஷ் ராம்ஜானி (0) அவுட்டாகினர். தொடர்ந்து அசத்திய பரூக்கி பந்தில் ராபின்சன் ஒபுயா (14), கப்டன் பிரையன் மசாபா (0) அவுட்டாகினர். ரஷித் கான் "சுழலில்" பிலால் ஹசன் (8), ஹென்றி செனியோன்டா (0) சிக்கினர்.

உகாண்டா அணி 16 ஓவரில் 58 ரன்னுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. ஆப்கானிஸ்தான் சார்பில் பரூக்கி 5, நவீன், ரஷித் கான் தலா 2 விக்கெட் சாய்த்தனர். (ரி-6)

# ரியல் மாட்ரிட் அணியில் இணைந்தார் எம்பாப்வே

ரியல் மாட்ரிட் கிளப் அணியில் எம்பாப்வே. 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் எம்பாப்வே, 25. சிறந்த முன்கள வீரரான இவர், களத்தில் பம்பரமாக சுழன்று கோல் அடிப்பதில் வல்லவர். தனது 19 வயதில் உலகக் கோப்பை (2018) வென்ற பிரான்ஸ் அணியில் இடம் பெற்றார். 23 வயதில் உலகக் கோப்பை பைனலில் (2022) "ஹாட்ரிக்" கோல் அடித்து சாதித்தார். இதில் அர்ஜென்டினாவிடம் பிரான்ஸ் தோற்ற போதும் எம்பாப்வே ஆட்டம் வியக்க வைத்தது. பந்தை வேகமாக கொண்டு சென்று சிறப்பான "பினிஷிங்" மூலம் கோல் அடித்து திறமை நிரூபித்தார்.




கிளப் அளவில் பிரான்சின் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.,) அணிக்காக 7 ஆண்டுகள் விளையாடினார் எம்பாப்வே. பி.எஸ்.ஜி., அணிக்காக அதிக கோல் அடித்தவர் பட்டியலில் முதலிடம் (308 போட்டி, 256 கோல்) பிடித்தார். 7 சீசனில் விளையாடி, 15 கோப்பை வென்று கொடுத்தார்.

தற்போது உலகின் தலைசிறந்த கிளப் அணியான ரியல் மாட்ரிட் (ஸ்பெயின்) அணிக்கு மாறியுள்ளார். சமீபத்தில் 15 ஆவது முறையாக சாம்பயின்ஸ் லீக் கோப்பை வென்ற ரியல் மாட்ரிட் அணியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ (போத்துக்கல்), ஜிடேன் (பிரான்ஸ்), ரொனால்டோ (பிரேசில்), டேவிட் பெக்காம் (இங்கிலாந்து), லுயிஸ் பிகோ (போத்துக்கல்), கரிம் பென்சிமா (பிரான்ஸ்) போன்ற ஜாம்பவான்கள் ஏற்கனவே விளையாடியுள்ளனர். இவர்கள் வரிசையில் எம்பாப்வேயும் சேர்ந்துள்ளார்.

இவர் வெளியிட்ட செய்தியில்,"எனது கனவு நனவாகியுள்ளது. ரியல் மாட்ரிட் அணியில் சேர்ந்தது பெருமையாக உள்ளது. நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியாது. மாட்ரிட் அணி ரசிகர்களை சந்திக்க காத்திருக்கிறேன்," என தெரிவித்துள்ளார். (ரி-6)

## ரி-20 செய்தித்துளிகள்

### குறைந்தபட்ச ஸ்கோர்

"ரி-20" உலக கோப்பை அரங்கில் ஒரு இன்னிங்சில் குறைந்தபட்ச ஸ்கோரை பதிவு செய்த 4 ஆவது அணியானது உகாண்டா (58/10). முதலிடத்தில் நெதர்லாந்து (39/10, எதிர்: இலங்கை, 2014, இடம்: சாட்டோகிராம்) உள்ளது.

### இமாலய வெற்றி

"ரி-20" உலக கோப்பையில் அதிக ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற 4 ஆவது அணியானது ஆப்கானிஸ்தான் (125 ரன்). முதலிடத்தில் இலங்கை (170 ரன், எதிர்: கென்யா, 2007, இடம்: ஜோகனஸ்பர்க்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று சந்தித்து கலந்துரையாடினர். ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் (காணி), மாகாண காணி ஆணையாளர் மற்றும் யாழ்.பிராந்திய பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (படம்-சிவசாந்தன்)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1083)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974





நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் 2024 குரோதி வருட உயர் திருவிழா

| | | | |
|---|---|---|---|
| 07.06.2024 | வெள்ளிக்கிழமை | 1 ஆம் திருவிழா | கொடியேற்றம் பகல் 12.00 மணி |
| 11.06.2024 | செவ்வாய்க்கிழமை | 5 ஆம் திருவிழா | பகல் - குடைத் திருவிழா,இரவு - முத்துச்சப்பரம் |
| 13.06.2024 | வியாழக்கிழமை | 7 ஆம் திருவிழா | இரவு - கைலைக்காட்சி |
| 16.06.2024 | ஞாயிற்றுக்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் - கைலைக் காட்சி, இரவு - திருமஞ்சம் |
| 17.06.2024 | திங்கட்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் - விசேட கருட,சர்ப்ப பூசையுடன் வாயு பட்சணி நாகம் திருவீதி உலா, இரவு- பூந்தண்டிகை |
| 19.06.2024 | புதன்கிழமை | 13 ஆம் திருவிழா | பகல் - சிவபூசைக் கைலைக்காட்சி,இரவு- சப்பரம் |
| 20.06.2024 | வியாழக்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் -இரதோற்சவம்,பிற்பகல் - பச்சை சாத்துதல்,இரவு -அம்பாள் தேரடி தரிசனம் |
| 21.06.2024 | வெள்ளிக்கிழமை | 15 ஆம் திருவிழா | பகல் -கங்காதரணியில் தீர்த்தோற்சவம்,இரவு -திருவூஞ்சல்,கொடியிறக்கம் |
| 22.06.2024 | சனிக்கிழமை | 16 ஆம் திருவிழா | தெப்போற்சவம்(பூங்காவனம்) |

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு. (சி-531)

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.

அறங்காவலர் சபை
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு.


# இராசிபலன்

06.06.2024
வைகாசி 24, வியாழக்கிழமை,
அமாவாசை முன்னிரவு 6.37 மணிவரை

ரோகிணி முன்னிரவு 9.03 மணிவரை
சுபநேரம் -7.22-8.52 மணிவரை
இராகுகாலம் -1.22-2.52 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்.
அத்தம்,சித்திரை.

வளவன்

**மேஷம்**
எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்**
அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, வருமானம் பெருகி [illegible]ளம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**
கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம், வரவும் செலவும் சமமாகும் நாள்.

**மகரம்**
உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**ரிஷபம்**
எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும்.

**சிம்மம்**
முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தொட்ட காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**
புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள்,உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**
விரயங்கள் ஏற்படா திருக்க விழிப்புணர்வு அவசியம்,ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கன்னி**
வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தொழில் போட்டிகள் மாறும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு**
இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்,செய் தொழில் நலன் ருதி ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள்.

**மீனம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

கெட்டவர்களுக்கு உறவும் கிடையாது நட்பும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுக்கையாறு-புங்குடுதீவு-குறிகட்டுவான் வீதியில்
# காப்பற் இடும் பணி ஆரம்பம்
### இரவு பயணங்களை தவிர்க்குமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்து

(சாவகச்சேரி)

வழுக்கையாறு-புங்குடு தீவு-குறிகட்டுவான் வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வாகன சாரதிகளுக்கான அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளனர்.

குறித்த அறிவித்தல் கடிதத்தில் வழுக்கையாறு-புங்குடுதீவு-குறிக்கட்டுவான் வீதியின் சில பகுதிகள் காப்பற் இடும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதிகள் காப்பற் இடும் போது இரண்டு வாகனங்கள் விலத்துவது கடினமானதாகும். எனவே வீதி அபிவிருத்திப் பணிகளை பகல்,இரவு எனப் பிரித்து மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்திப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு வாகனச் சாரதிகள் மாலை 6 மணியில் இருந்து காலை 6மணி வரை இப்பகுதியினுடாக போக்குவரத்துவரத்தினை தவிர்த்து உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.(நி-6-30)



மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரத்தின் 22 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நெல்லியடியில் அமைந்துள்ள சிவசிதம்பரத்தின் சிலையடியில் நேற்று இடம்பெற்றது. இதன்போது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்: சிவசாந்தன், மகாலிங்கம்)

## இலவச சட்ட உதவி சேவை

(சாவகச்சேரி)

யாழ்.சாவகச்சேரி, கோயில் குடியிருப்பு பகுதி யில் சட்ட உதவி ஆணைக்குழுவின் இலவச சட்ட உதவி சேவை இடம் பெறவுள்ளது. கோயில் குடியிருப்பு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையில் சேவை இடம் பெறவுள்ளது.

அதன் போது வீட்டு வன்முறை, பால்நிலை சார் வன்முறைகளில் பாதிக்கப் பட்டவர்களுக்கு சட்ட ஆலோசனை, சட்ட வழிகாட்டல்கள் இடம்பெறும்.

இவ் சட்ட சேவையை பெற வருவோர் பிறப்பு சான்றிதழ், அடையாள அட்டை, சட்ட உதவி பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான ஆவணங்களை கொண்டு வருமாறும், மேலதிக தகவல்கள் தேவைப்படு வோர் 077 554 7902 மற்றும் 077 265 8002 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6-33)

## தேர்தலில் பொது வேட்பாளரை ஆதரிக்க புளொட் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை தாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தனன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்திலே தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் சமூக வாழ்வின் எதிர்பார்ப்புகளையும் நாளாந்தம் முகம் கொடுத்து வரும் நெருக்கடிகளையும், தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் தொடர்ச்சியான ஏமாற்றுத்தனங்களையும் உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில், ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை எமது கட்சியின் மத்தியகுழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற் படுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-33)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையானது ILO மற்றும் FCCISL உடன் இணைந்து நடத்தும் விருந்தோம்பல் துறையில் வேலைஅடிப்படையிலானகற்கை நெறிக்கான NVQ-03 சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும், வெளிநாடு செல்லவிருப்போர் மற்றும் சுற்றுலாத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் இக்கற்கைநெறி முற்றிலும் இலவசம், காலம் 2 மாதங்கள், விண்ணப்ப முடிவுத்திகதி 20.06.2024 இக்கற்கை நெறிகள் மாவட்ட அலுவலக பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

மேலதிக தகவல்களுக்கு மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ள முடியும். அல்லது 021 222 2383 மற்றும் 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.தே.ப.கை.ப அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் அறிவித்துள்ளார். (நி-6)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் இதுவரை உரிமை கோரப்படாததுமான வாகனங்கள் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை இடம் பெறவுள்ளது என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)


## மரண அறிவித்தல்
### ஞானேந்திரன் மனோன்மணி



தோற்றம் 22.10.1947 | மறைவு 04.06.2024

ஈவினை மத்தி புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேந்திரன் மனோன்மணி அவர்கள் 04.06.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா அன்னபூரணத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, வீரலட்சுமியம்மா ஆகியோரின் மருமகளும் ஞானேந்திரனின் பாசமிகு மனைவியும், ஜோகராணி அவர்களின் அன்புச் சகோதரியும் நித்தியசோதி, கதிர்காம ரஞ்சன், ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகுரு, சிவநாயகி, நிர்மலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனுசா, கஜன், லக்ஷனா, சந்தியா, சதுர்ஷன், சகானா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.06.2024 நாளை வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
077 8999 740

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன். (1109)


## சாவகச்சேரி மருத்துவமனையில் இரத்த வங்கி திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரத்த வங்கி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மருத்துவமனையின் அத்தியட்சகர் [illegible] தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் தேசிய இரத்தவங்கி மற்றும் இரத்த மாற்று சேவைகள் பணிப்பாளர் லக்ஸ்மன் எதிரிசிங்க கலந்து கொண்டு இரத்த வங்கி அலகினைத் திறந்து வைத்திருந்தார். திறப்புவிழா நிகழ்வில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனை சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியின்மையால் மறுக்கப்பட்ட வாய்ப்பு கிளிநொச்சி மக்கள் விசனம்

## பிரதம செயலாளருக்கு சிறீதரன் எம்.பி கடிதம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மலையாளபுரம் புதியபாரதி விளையாட்டுக் கழகத்தின் இரு வீரர்கள் தேசியமட்ட கடற்கரை கரப்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்குத் தகுதி பெற்றிருந்த போதும், நிதியின்மை காரணமாக அவர்களின் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்ற, இருவர் பங்குபெறும் கரப்பந்துப் போட்டியில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இயங்கும் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட ஜெயப்பெருமாள் மோகனரூபன், நாகராசா நிசாந்தன் ஆகிய இரு வீரர்களும் பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண நிலைகளில் வெற்றியீட்டி 2024.05.31 - 2024.06.02 வரையான மூன்று நாட்கள் நீர்கொழும்பில் நடைபெற்ற தேசியமட்ட போட்டிகளுக்கு தகுதிபெற்றிருந்த போதும், "நிதியின்மை" காரணமாக அவர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை என்ற விடயம், கிளிநொச்சி மாவட்ட மக்களிடையே மிகக்கூடிய விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. சமநேரத்தில் அந்த மக்களின் பிரதிநிதியாக என்னையும் பாதிக்கின்ற சம்பவமாகவே நான் இதனைக் கருதுகிறேன்.

தேசியமட்ட மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றிருந்தும், நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த, பலநிலைப்பட்ட மாணவர்கள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கு நன்கொடையாளர்கள், நிதியங்கள் என்பவற்றின் அனுசரணையோடும் உதவிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பிற்பாடே இவ்விடயம் குறித்து அறிய முடிந்ததால் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

அதேவேளை இவ்விடயம் அறிந்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் என்னைத் தொடர்புகொண்டு வினவியதோடு தனது கவலையைப் பதிவுசெய்திருந்ததையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இந்நிலையில், தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்பதற்காக குறித்த வீரர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பு மாகாண நிர்வாகத்திற்கு உட்பட்டது என தெரிவிக்கப்படும் நிலையில், இடர்கள் மிகுந்தும் வளங்களும் வாய்ப்புகளும் குறைந்தும் இருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மலையாளபுரக் கிராமத்திலிருந்து தமது திறமையால் தேசிய அங்கீகாரத்திற்குத் தகுதிபெற்ற வீரர்களது வாய்ப்பு, நிர்வாக நடைமுறைகளின் சீரின்மையால் பறிக்கப்பட்டிருப்பது மனவருத்தத்துக்கும் கண்டனத்துக்கும் உரிய விடயம் என்பதுடன் அதுசார்ந்து குறித்த வீரர்கள் அதியுச்ச உளத்தாக்கங்களை எதிர்கொண்டிருப்பார்கள் என்பதை தாங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இதுவிடயமாக தாங்கள் உயரிய கரிசனைகொண்டு, குறித்த வீரர்களின் வாய்ப்பு மறுக்கப்பட்டமைக்குரிய காரணத்தை வெளிப்படுத்துவதற்கும், அதற்கு மாகாண நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும் எனில் உரிய அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் இதுபோன்ற சம்பவங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-316)



யாழ். சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினர் பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்விற்கு எதிராக போராடி வருகின்ற மக்களை சந்தித்து சட்ட ஆலோசனைகள் வழங்கி வைப்பு. (படம்: கிருஷ்ணகுமார்)



பொன் சிவகுமாரனின் 50 ஆவது நினைவேந்தல் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்ட பொன் சிவகுமாரனின் திருவுருவச்சிலையில் நேற்று உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் மற்றும் அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன், அதன் செயலாளர் தனுபன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அகவணக்கம் செலுத்தியதுடன் திருவுருவச் சிலைக்கு தீபமேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### நெல்லியான் வீதி, இல 55/02 வட்டாரம்-05

வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05 நெல்லியான் வீதியிலுள்ள இல: 55/02 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் மரியான் இலட்சுமணர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை மாரியன் இராமு கைம்பெண் வள்ளியம்மை ஆகியவர் குறித்த ஆதனம் தனது காலஞ்சென்ற கணவருக்கு அவரின் தகப்பனாரால் கொடுக்கப்பட்டது. என்றும் தனது காலஞ்சென்ற கணவர் மாரியன் இராமு தனது சீதனப்பணத்தினை எடுத்து காணி வேண்டுவதற்கும் வேறு விடயங்களுக்கும் பாவித்த காரணத்தினால் அதற்காக தனது கணவனாரான மாரியன் இராமு 1977ஆம் ஆண்டளவில் குறித்த ஆதனத்தினை தனக்கு வாய்ச்சொல் நன்கொடையாக தந்து இது தனது சொந்தக்காணியாக இருக்க வேண்டும் எனவும் வற்புறுத்தியிருந்தார் என்றும் அன்றிலிருந்து கடந்த 25 வருடங்களுக்கு மேலாக குறித்த ஆதனத்தினை தானே ஆட்சி செய்து வருகின்றேன் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 6918/27.12.2002ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த ஆதனத்தின் மற்றைய பகுதியினை பெரியான் சுப்பன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.இளையதம்பி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1619/21.01.1945ஆம் இலக்க உறுதியால் கதிரேசு வேலுப்பிள்ளை ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை மாரியன் இராமு ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7021/22.12.1957ஆம் இலக்க உறுதியால் குறித்த பெரியான் சுப்பன் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை இளையதம்பி நடராசா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6043/11.07.1963ஆம் இலக்க உறுதியால் குறித்த மாரியன் இராமு ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை மாரியன் இராமுவும் பெண் வள்ளியம்மையும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1469/18.07.1973ஆம் இலக்க உறுதியால் குறித்த இளையதம்பி நடராஜா ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனங்களினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை கதிரவேலு மதனகோபாலகிருஸ்ணன் பெண் ஞானேஸ்வரி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6921/27.12.2002ஆம் இலக்க உறுதியால் குறித்த மாரியன் இராமு கைம்பெண் வள்ளியம்மை ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை சின்னையா பொன்னுத்துரையும் பெண் இராசேஸ்வரியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7886/01.09.2004ஆம் இலக்க உறுதியால் குறித்த கதிரவேலு மதனகோபாலகிருஸ்ணனும் பெண் ஞானேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை செல்லப்பன் பரமநாயகமும் பெண் புவனேஸ்வரியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் 8893/26.05.2007ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னையா பொன்னுத்துரையும் பெண் இராசேஸ்வரியும், கதிரவேலு மதனகோபாலகிருஸ்ணனும் பெண் ஞானேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த செல்லப்பன் பரமநாயகமும் பெண் புவனேஸ்வரியும் ஆகியவர்கள் ஆதனத்தின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனங்களின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லப்பன் பரமநாயகமும் பெண் புவனேஸ்வரியும் ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
வலிகாமம் மேற்குபிரதேசசபை.

(1106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



# 3 ஆவது முறையாக பிரதமராகிறா

# 8 ஆம் திகதி பதவியேற்பு

(டில்லி)

**மோடி 3 ஆவது முறையாக பிரதமர யேற்க உள்ளார். பதவியேற்பு விழ மறுதினம் 8 ஆம் திகதி நடைபெற தகவல் வெளியாகியுள்ளது.**

நாடு முழுவதும் மொத்த முள்ள 543 பாராளுமன்ற தொகுதிக ளுக்கு 7 கட்டங்க ளாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக் குகள் நேற்று எண்ணப் பட்டன. இதில் பா.ஜ.க. த லை மை யி லா ன தேசிய ஜனநாயகக் கூட் டணி 292 தொகுதிக ளைக் கைப்பற்றியது.

இதில் பா.ஜ.க. 240 தொகு திகளை கைப்பற்றி யது.

மத்தியில் ஆட்சிய மைக்க 272 தொகுதி களைக்கைப்பற்ற வேண் டிய நிலையில் பாஜக கூட்டணி 292 இடங் களை கைப்பற்றியுள் ளது. இதில் கூட்டணியில் இடம் பெற்றிருந்த தெலு ங்கு தேச 16 தொகுதி களையும், ஐக்கிய ஜனதா தளம் 12 தொகு திகளையும் கைப்பற்றின.

இந்நிலையில், மோடி 3 ஆவது முறையாக பிரத மராக பதவியேற்க உள்ளார். பதவி யேற்பு விழா வரும் 8 ஆம் திகதி மாலை நடைபெற உள்ளது.

முன்னதாக, பா.ஜ.க. தலைமையில் இடம் பெற் றுள்ள தேசிய ஜனநாயக

## மிஸ் யூ பாலு...

(சென்னை)



மறைந்த பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத் தின் பிறந்த நாளன்று அவரைப் பற்றிய நினைவு களைப் பகிர்ந்துள்ளார் இசையமைப்பாளர் இளை யராஜா.

மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ர மணியத்தின் 74 ஆவது பிறந்தநாள் நேற்று முன் தினம் ஆகும். கடந்த 2020 அன்று கொரோனா காலகட்டத்தில் எஸ்.பி.பி. மறைந்தது திரையுல கிற்கே பேரிழப்பாக அமை ந்தது.

எஸ்.பி. பாலசுப்ரம ணியத்தின் உற்ற நண் பரும் இசையமைப்பாளரு மான இளையராஜா, எஸ். பி.பி-யின் பிற ந்தநாளில் நி னை வு கூர் ந் திரு க்கிறார்.



அவரது எக்ஸ் பக் கத்தில், 'என் றும் என் நினைவில் பாலு. மிஸ் யூ' என உருக்கமாகப் பகிர்ந்துள் ளார்.

திரையுலகில் இளை யராஜா இசையமைப் பில் "மன்றம் வந்த தென்றலுக்கு', 'சுந்தரி கண்ணால் ஒரு சேதி' உள்ளிட்ட ஏராளமான ஹிட் பாடல்களைப் பாடி யிருக்கிறார்.

அவர் மறைவைத் தாங்கிக் கொள்ள முடி யாமல் தேம்பி அழுத இளையராஜா, அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று அந்த சமயத்தில் திருவண் ணாமலையில் மோட்ச விளக்கு ஏற்றி நெகிழ வைத்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (நி-6)

## மன்னர் சார்லஸின் உருவம் பொறித்த நாணயத்தாள்கள்



(லண்டன்)

பிரித்தானியாவில் மன்னர் சார்லஸின் உருவம் பொறித்த நாணயத்தாள்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன.

எலிசபெத் மகாராணியின் மறைவுக்குப் பிறகு பிரிட்டன் அரசராக சார்லஸ் பொறுப்பேற் றுக் கொண்டார். அவரது பதவி யேற்பு நிகழ்ச்சியை சிறப்பிக்கும் வகையில், அவரது உருவம் பொறித்த சிறப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

மன்னர் சார்லஸ் உருவம் பொறித்த 10, 20 மற்றும் 50 பவுண்டு நாணயத்தாள்களை இங்கிலாந்து வங்கி வெளியிட்டு ள்ளது.

BANK OF INGLAND பிரதி நிதிகளால் அவரது உருவப்படம் கொண்ட முதல் நாணயத்தாள் கள் நேற்று வழங்கப்பட்டன.

மூன்றாம் மன்னர் சார்ல ஸின் உருவப்படம் கொண்ட பிரிட்டன் நாணயத்தாள்கள் நேற்று முதல் புழக்கத்திற்கு வந்தன.

வரும் வாரங்களில் தேர்ந் தெடுக்கப்பட்ட அஞ்சல் அலு வலகக் கிளைகளில் இருந்தும் அவை கிடைக்கும் என்று தெரி வித்துள்ளது. (நி-6)

## பாலஸ்

## அங்கீக

(சுலோவேனியா)

பாலஸ்தீனத்தை தனிநாடாக மற்றொரு ஐரோப்பிய நாடான சுலோவேனியா அங்கீ காரம் அளித்துள்ளது. பாலஸ்தீனத்தை ஒரு சுதந்திர மற்றும் இறை யாண்மை கொண்ட நாடாக அங்கீகரிக்க சுலோவேனியா அர சாங்கம் முடிவு செய் தது.

இதற்கு அந்நாட்டு பாராளுமன்றத்தில் ஒப் புதல் பெறப்பட்டது. பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க நடத்திய வாக்கெடுப்பு வெற்றி பெற்றது.

இதுகுறித்து சுலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## றார் மோடி
## பு விழா

மராக பதவி
விழா நாளை
ற உள்ளதாக

தாகு
றின..
மாடி
யாக
பற்க
பற்பு
ஆம்
பெற
ஜ.க..
பெற்
ாயக

கூட்டணியினர் ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து ஆட்சியமைக்க உரிமைகோர உள்ளனர். அதன்அதன்பின் வரும் 8 ஆம் திகதி மாலை பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு பதவியேற்பு விழா நடை பெற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-6)

## சர்வதேச நீதிமன்றத்திற்கு எதிராக தடைகளை விதிக்கும் சட்டமூலம்

### நிறைவேற்றியது அமெரிக்க செனற் பிரதிநிதிகள் சபை



(வோஷிங்டன்)

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிரான பிடியாணை தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிராக தடைகளை விதிக்கும் சட்டமூலம் அமெரிக்க செனட் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட் பிரதிநிதிகள் சபையில் உள்ள இஸ்ரேல் சார்பு குடியரசுகட்சி உறுப்பினர்கள் முன்மொழிந்த சட்ட மூலத்தை செனட் பிரதிநிதிகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

அமெரிக்கக் குடியரசுக் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ள சனப்பிரதிநிதிகள் சபையில் 247 பேர் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். 155 பேர் எதிராக வாக்களித்துள்ளனர்.

இஸ்ரேலை ஆதரிக்கும் ஜனநாயக கட்சியின் பிரதிநிதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அது சட்டமாக மாற்றப்படாது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

செனெட்டில் பெரும்பான்மையை கொண்டுள்ள ஜனநாயக கட்சியினர் இந்த சட்ட மூலத்தை நிராகரிப்பார்கள் என சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது. செனட்டின் ஆதரவு கிடைத்தால் மாத்திரமே இந்த சட்டமூலம் சட்டமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்த சட்ட மூலத்தை கடுமையாக எதிர்க்கின்றார் எனவும் குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது. (நி-6)

## பிரதமர் நரேந்திர மோடிக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்து



(டில்லி)

லோக்சபா தேர்தலில் பா.ஜ வென்ற நிலையில், பிரதமர் மோடிக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.



**மாலை தீவு ஜனாதிபதி முகமது முய்சு**

லோக் சபா தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்ற பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பா.ஜ தலை மையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாழ்த்துக்கள். ஒன்றிணைந்து செயற்பட நான் எதிர்பார்க்கிறேன்.



**இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி-**

சிறப்பாக செயற்பட பிரதமர் மோடிக்கு எனது அன்பான வாழ்த்துக்கள். இரு நாட்டு மக்களின் நலனுக்காக இணைந்து பணியா ற்றுவோம்.



**இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க**

மோடி மீதான இந்திய மக்களின் நம்பிக்கையை இந்த வெற்றி காட்டுகிறது.

**அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர்:**

ஜனநாயக திருநாட்டில் பெரும் தேர்தல் பணிகளை சிறப்பாக நடத்தி முடித்துள்ள இந்தியாவிற்கு பாராட்டுக்கள். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு நெருக்கமான கூட் டாண்மை தொடரும். பிரதமர் மோடிக்கு வாழ்த்துக்கள்.



**மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத்:** மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ள பிரதமர் மோடிக்குவாழ்த்துக்கள். உங்கள் தலைமையில் இந்தியா தொடர்ந்து முன்னேற்றத்தை அடையும்."மொரீஷியஸ் -இந்தியா உறவு வாழ்க".



**நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால்**

தொடர்ந்து மூன்றாவது முறையாக லோக் சபா தேர்தலில் பா.ஜ மற்றும் தே.ஜ கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு வித்திட்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்கள்.



**பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே**

உலகின் மிகப்பெரிய தேர்தலில் வரலாற்று சிறப்பு மிக்க வகையில் மூன்றாவது முறையாக வெற்றி பெற்ற நண்பர் பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்கள். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்த, அவருடன் பயணியாற்ற ஆவலோடு உள்ளேன். (நி-6)

## ஸ்தீனத்தை தனி நாடாக
## கீகரித்த சுலோவேனியா

தை
ாரு
ான
ங்கீ
து.
ஒரு
றை
ன்ட
க்க
அர
சய்
ட்டு
ஒப்
து.
னி
க்க
ப்பு
லா




வேனியா பிரதமர் ராபர்ட் கோலோப் கூறும் போது, இன்றைய பாலஸ்தீனத்தை ஒரு இறையாண்மை மற்றும் சுதந்திர நாடாக அங்கீகரிப்பது மேற்குக் கரை மற்றும் காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு நம்பிக்கையை அளிக்கிறது" என தெரிவித்தார்

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் ஸ்பெயின், நோர்வே அயர்லாந்து ஆகிய நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக சமீபத்தில் அங்கீகரித்தன. இதற்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பினர் களில் சுவீடன், சைப்ரஸ், ஹங்கேரி, செக் குடியரசு, போலந்து, ஸ்லோவாக்கியா , ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகள் பாலஸ்தீன அரசை அங்கீகரித் துள்ளன. இதே போல் மால்டா நாடும் அதை விரைவில் பின்பற்றலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராசூட் நாற்றங்கால் தட்டு;

## மானியத்தின் கீழ் வழங்க முடிவு

(கொழும்பு)

4000 விவசாயிகளுக்கு 40 இலட்சம் ரூபா பெறுமதியான பாராசூட் நாற்றங்கால் தட்டுக்களை 25% மானியத்தின் கீழ் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் இந்த மானியம் வழங்கப்படவுள்ளது.

குறித்த தீர்மானமானது, விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் ஆலோசனைக்கமைவாக எடுக்கப்பட்டுள்ளது.

புதிய விவசாய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்தின் கீழ், நாற்றுகளை நடுவதற்கு இந்த பாராசூட் நாற்றங்கால் தட்டுக்கள் பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (நி-6)

## சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கண்டல் தாவர நடுகை



(மன்னார்)

சர்வச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மன்னார் பெரிய பாலம் மற்றும் தள்ளாடி இடை நடுவில் காணப்படும் கரையோரப் பகுதிகளில் நேற்று கண்டல் தாவரங்கள் மீள் நடுகை செய்யப்பட்டன.

குறித்த நிகழ்வுக்கான 300 கண்டல் தாவரங்களை டினோஸா கண்டல் தாவரப் பள்ளி வழங்கியிருந்தனர்.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகம் இணைந்து மெசிடோ நிறுவனத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு மரநடுகையை ஆரம்பித்து வைத்தார்.

(நி-6-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 280 | 300-400 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 120 | 150-180 | 200 |
| தக்காளி | 200 | 250 | 220 | 150 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 120 | 100-120 | 200 |
| கோவா | 300 | 200 | 200 | 170 | 300 |
| கரட் | 250 | 250 | 180 | 250 | 300 |
| பூசணி | 120 | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 200 | 200 | 200 | 130 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 50 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 300-450 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 230 | 250 |
| பாகற்காய் | 600 | 1000 | 550 | 500 | 800 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 500 | 450 | 480 | 300 | 500 |
| பீற்றூட் | 450 | 400 | -- | 300 | 500 |
| கறிமிளகாய் | 500 | 500 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 400 | 300-500 | 600 |
| போஞ்சி | 600 | 600 | -- | 350 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 200 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 80 | 120-140 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 800 | 700-1000 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 110 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | — | 400 |
| வெங்காயப்பூ | 700 | 500 | 450 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 180 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | — | 80 | — |

## இன்று ஒரு தகவல் 146



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நிற வைத்தியம்

கண்ணிற்கு அழகான நிறங்களில் பூக்கள் கலர் கலராக பூத்திருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறம் பிடித்திருக்கும். இருந்தாலும் எல்லா நிறமும் அழகு தான். இந்த நிறங்களைப் பற்றி சில விபரங்கள் இருக்கிறது. ஒவ்வொரு நிறமும் சும்மா இருப்பதில்லை. எதையாவது செய்துகொண்டு தான் இருக்கும்.

இப்போது கார் பார்ப்பதற்கு அழகாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தானே அது மேலே நிறப்பூச்சு அடிக்கிறார்கள். ஆனால் காருடைய நிறத்திற்கும் கார் விபத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று ஒரு கண்டுபிடிப்பு. இங்கிலாந்திலே இதைப் பற்றி ஒரு ஆராய்ச்சி நடந்திருக்கிறது. சிவப்பு நிறம் சாம்பல் நிறம் இந்த இரண்டு நிறத்தில் உள்ள கார்கள் தான் அடிக்கடி விபத்துக்களில் மாட்டிக்கொள்கிறதாம்.

மஞ்சள் நிறக்கார் எப்படித் தெரியுமா? இவை எல்லாம் பகல் நேரத்தில் அதிகமாக விபத்தக்களில் மாட்டிக்கொள்வது இல்லையாம். ஆனால் மாலை வேளைகளிலும் இரவு வேளைகளிலும் அதிகமாக விபத்திற்கு உள்ளாவது மஞ்சள் நிறக்கார் தானாம்.

சரி எந்த நிறத்திலுள்ள கார் அதிகமாக விபத்திலே மாட்டிக்கொள்ளாமல் இருக்கிறது? பழுப்பு நிறத்தில் உள்ள கார் பரவாயில்லையாம். இதற்காக கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் நிறத்தை மாற்றலாம் என்று நிறப்பூச்சை சுறண்ட ஆரம்பித்து விடாதீர்கள். இப்போது நான் கூறியது இங்கிலாந்திலே எடுத்த ஒரு புள்ளிவிபரம் இங்கே எப்படி என்று அனுபவத்திலே தான் பார்க்க வேண்டும்.

நிறம் தான் விபத்திற்கு காரணம் என்று நினைத்து அதையெல்லாம் வெறுக்க ஆரம்பித்து விடாதீர்கள். ஏன் என்றால் வர்ணங்கள் நமது உடலிலே உள்ள பல வியாதிகளை தீர்ப்பதற்கு உபயோகப்படுகிறது. சூரியக் கதிரிலே ஏழு நிறங்கள் இருக்கிறது என்று படித்திருக்கிறோம். நமது உடலிலும் அந்த ஏழு நிறம் உண்டு. அது கூடினாலும் குறைந்தாலும் உடலில் சில கோளாறுகள் வந்துவிடும். இதை சரிப்படுத்தும் சிகிச்சை முறைக்குத்தான் ஆங்கிலத்தில் "குரோமோ தெரபி" என்று பெயர். வெள்ளைக்காரர்கள் சிலர் சுகமாக வெயிலிலே படுத்துக்கிடப்பார்கள். ஏன் என்று கேட்டால் I am taking sun bath என்பார்கள். வெயிலிலே குளிக்கிறார்களாம். இயற்கை வைத்தியம் இது.

சரி ஏழு நிறத்திற்கும் என்னென்ன குணம் தெரியுமா?

சிவப்பு நிறம்- உடலிற்கு வெப்பத்தைக் கொடுக்கிறது. எலும்புருக்கி (TB), நீரிழிவு, மஞ்சட்காமாலை, சொறி, சிரங்கு இது மாதிரி நோய் எல்லாம் இது போக்கி விடுகிறது.

நீலநிறம் - இது இருமல், இளைப்பு, வாதம், மூட்டுப்பிடிப்பு இந்த நோய்களை எல்லாம் கட்டுப்படுத்துகிறது.

ஊதா நிறம்- இரத்தத்திலே உள்ள சிவப்பு அணுக்களைப் பெருக் குகிறது. நரம்புகளுக்கு அமைதியைக் கொடுக்கிறது.

கருநீலநிறம் சுவாச சம்பந்தமான கோளாறுகளைப் போக்குகிறது. மலச்சிக்கலை நீக்குகிறது.

செம்மஞ்சள் நிறம்- இரத்த அபிவிருத்தி செய்கிறது. நரம்புகளுக்கு வலுவைக் கொடுக்கிறது. நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்குகிறது.

பச்சை நிறம்- கண் ஒளியைப் பெருக்கிறது. கருப்பைக் கோளாறுகளைப் போக்குகிறது. தாது பலத்தை உண்டாக்கிறது.

மஞ்சள் நிறம்- மலச்சிக்கலை நீக்கிறது. தொழுநோயைக் குணமாக்கிறது. இந்த நிறத்தை அளவுடன் பயன்படுத்த வேண்டும்.

சரி சூரிய ஒளியிலே ஏழு நிறம் இருக்கிறது அதை எப்படி நாம் எடுத்து உபயோகப் படுத்துவது. சூரிய ஒளியிலே இருந்து கிடைக்கின்ற நிறங்களை நீரிலே இறக்கி அந்த நீரை மருந்ததாகக் கொடுக்கலாம். எண்ணெய் மூலமாகவும் இந்த நிறங்களை எண்ணெயில் ஏற்றி அதை உடம்பில் தேய்த்துக் கொள்ளலாம். நல்லெண்ணெய், கடுகு எண்ணெய், ஆளிவிதை எண்ணெய் இவற்றில் மட்டும் இந்த நிறங்களைப் பக்குவமாக இறக்கலாம்.

சூரியக் கதிர்களை தண்ணீரிலேயோ எண்ணெயிலேயோ எப்படி வடித்து எடுப்பது? எந்த நிறம் வேண்டுமோ அந்த நிறக்கண்ணாடிப் போத்தலை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலே கிணற்றுத் தண்ணீரோ அல்லது மழைத்தண்ணீரோ ஊற்றி கழுத்து வரை நிரப்புங்கள். ஒரு வாரம் வெயிலில் வையுங்கள். அவசரம் என்றால் இரண்டு நாட்கள் சூரிய ஒளியில் வையுங்கள். வெயில் இல்லாத நேரமா? பரவாயில்லை 40 வாட்ஸ் மின்குமிழ் இருக்கிறது அல்லவா? அதிலே நிறத்தாள் அல்லது நிறத்துணியைக் கட்டுங்கள். அந்த வெளிச்சம் போத்தலில் படும் படி வைத்தால் போதும்.

இன்னொரு முறை இருக்கிறது. பெரிய பெட்டியொன்றை செய்து அதில் நிறக் கண்ணாடிகளைப் பதிக்கலாம். ஒளி ஊடுருவி உள்ளே போவது போல் பல நிறங்களில் பட்டுத்துணிகளையும் கட்டி வைக்கலாம். பேசாமல் அந்தப் பெட்டிக்குள்ளே போய் ஒரு ஐந்து அல்லது பத்து நிமிடம் உட்கார்ந்து கொள்ளுங்கள் அது போதும். எண்ணெய்களை சூரிய ஸ்புடம் போட்டு உபயோகப்படுத்தலாம். இந்த நிறங்களை பாலில், சக்கரைத்தூளில் இறக்கலாம். அதை மருந்தாக சாப்பிடலாம். பல நிறங்களில் போத்தல்கள் இருக்கிறது. அதை உபயோகப்படுத்தலாம்.

இயற்கை வைத்தியம் என்ன சொல்கிறது? மனிதனுக்கு வரும் சில சோய்களை சூரிய ஒளியில் உள்ள நிறங்கள் குணப்படுத்துகிறது என்று சொல்கிறது. இயற்கை வைத்தியர்களிடம் சென்றால் இதை முறையாக செய்வார்கள். அவர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். நான் ஒரு குரோமோ தெரபி அதாவது நிற வைத்தியம் சொல்கிறேன். செய்து பார்த்து விட்டு பலன் எப்படி என்று சொல்லுங்கள்.

குடும்பத்திலே எவ்வளவோ தொல்லைகள், குழப்பங்கள் இருக்கலாம். அதற்கு ஒரு நிற வைத்தியம் இருக்கிறது. வேற ஒன்றும் இல்லை! உங்கள் வீட்டுக்காரர்களுக்கு பிடித்த நிறத்திலே புடவை, பிடித்த நிறத்திலே பூ இவற்றை வாங்கிக் கொண்டு போய் கொடுத்துப் பாருங்கள். உடனடியாகவே "குணம்" தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு
# வாகன புகை பரிசோதனை



(முறிகண்டி)
உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வாகனப் புகை பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக குறித்த பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ஏ9 வீதியால் பயணித்த முச்சக்கர வண்டிகள், பேருந்துகள், பாரஊர்திகள் என அனைத்து வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டன.

சுற்றாடல் அதிகார சபை, மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பொலிஸார் இணைந்து குறித்த செயற்றிட்டத்தினை முன்னெடுத்தனர். (நி-6-100)

# முல்லையை சேர்ந்த அறுவர் ராமேஸ்வரத்தில் தஞ்சம்



(மன்னார்)
முல்லைத்தீவில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் நேற்று புதன்கிழமை அதிகாலை ராமேஸ்வரத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் இருந்து மன்னாருக்கு சென்று மன்னாரில் இருந்து சட்ட விரோதமாக கடல் வழியாக படகில் புறப்பட்டு அதிகாலை ராமேஸ்வரம் அடுத்த சேராங் கோட்டையை தாய் தந்தை மற்றும் நான்கு பிள்ளைகள் உள்ளடங்களாக 6 பேர் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் ஆறு பேரையும் மீட்ட மரைன் பொலிஸார் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-285)

# குழாய் வழி குடிநீரை கோரும் கிராம மக்கள்

(தருமபுரம்)
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான் கிராம மக்கள் தங்களது கிராமங்களுக்கு குழாய் வழி குடிநீர்விநியோகத்தை வழங்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமங்களின் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பெருமளவில் உவராகவும் மாற்றமடைந்துள்ளமையால் பொது மக்கள் குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவையினை பூர்த்தி செய்துகொள்ள கடும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இந் நெருக்கடி காரணமாக பொதுமக்கள் நீண்ட தூரம் பயணித்து இராணுவ முகாம் மற்றும் ஆலயங்களில் குடிநீரை பெற்று வருகின்றனர். வன்னேரிக்குளம் கிராமத்தில் சுமார் 480 குடும்பங்களைச் சேர்ந்த 1650 பேரும் ஆனைவிழுந்தான் கிராமத்தில் 439 குடும்பங்களைச் சேர்ந்த 1365 பேரும் வசிக்கின்றனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் குழாய் வழியிலான குடிநீர் விநியோகத்தை குறித்த கிராம மக்களுக்கு வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும் என அக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)

# இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பில் ஆராய்வு

(மன்னார்)
இரணைமடு நீர்பங்கீடு தொடர்பான கலந்துரையாடலானது இரணைமடு கமக்கார அமைப்புக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்தி ஜீவிகளுடன் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பான யாழ். மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாதவாறு ஒரு தீர்க்கமான முடிவினை எட்டுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்படி தெளிவுபடுத்தினார். (நி-6-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3136

**கோபிகா**

எவ்வளவு சோகமாக இருந்தாலும் கரெக்ட் டைமுக்கு பசிக்குது



என்ன மானங்கெட்ட வயிறோ

**பிறேமினி**

யூரியூப்ல சமையல் வீடியோவைப் பார்த்து சமைப்பம் என்று ஆரம்பித்தால் கடுகை எண்ணெயில் தாளிக்கவும் என்று சொல்லும் போது AD போடுறாங்கள்



skip பண்றதுக்குள்ள கடுகு கருகி போயிற்று என்ன பண்ணலாம்

**லோஜினி**

நான் எல்லாம் ஒரு பிரச்சினை வந்தால் அதை அன்றைக்கே மறந்திடுவேன்




அது தான் அடுத்த நாள் புதுசா ஒரு பிரச்சினை வந்திடுமே

**பிரசாந்**

எல்லோருமே கண்டிப்பாக கல்யாணம் பண்ணிக்கனும்



ஏனென்றால் சந்தோசம் மட்டுமே வாழ்க்கை இல்லை

**பிரதீப்**

கடும் மழை எச்சரிக்கை விடுத்திட்டாங்கள்



காலையில பார்ப்பம் எந்த நாட்டில கரையொதுங்கிறோம் என்று

**கனுஷிகா**

ATM மெஷின் வெடிக்கிற அளவுக்கு என்னடி செஞ்சாய்?



Enter your pin என்று கேட்டுச்சு? பர்ஸிலிருந்த பெரியபின்னா எடுத்து உள்ளவிட்டேன். ஷாட் சர்க்கூட் ஆகி வெடிச்சிட்டு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 500





இந்தப் பரந்த பூ மண்டலத்தில் தங்கள் ஆணைக்குக் கீழ்ப்படியாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் தங்கள் திருப்புதல்வர்கள் இருவர் மட்டும் இதற்கு விலக்காயிருக்கின்றனர். அவர்களுக்குத் துர்ப்புத்தி புகட்டும் சிலர் சோழ மகா ராஜ்யத்தில் பெரிய பதவிகள் வகிக்கிறார்கள். ஆதித்த கரிகாலர் தங்கள் விருப்பத்தின்படி இங்கு வருவதற்கு மறுத்து தங்களைக் காஞ்சிக்கு வரும்படி ஓலை அனுப்புகிறார். அவருக்கு இவ்வாறு துர்புத்தி புகட்டுகிறவர் வேறு யாரும் இல்லை தங்கள் மாமனாரான திருக்கோவலூர் மலையமான் தான். அவ்வாறே ஈழ நாட்டிலிருந்து தங்கள் இளம் புதல்வரைத் தருவிக்கும் படியாகத் தாங்கள் பன்முறை சொல்லி விட்டீர்கள். நானும் ஆள் அனுப்பி அலுத்து விட்டேன். நமது ஆட்கள் இளவரசரைச் சந்திக்காத படியும் நம் ஓலை இளவரசரைச் சேராதபடியும் அந்தக் கொடும்பாளூர்ப் பெரிய வேளான் செய்து கொண்டு வருகிறான். இல்லாவிடில், தங்கள் அருமைப் புதல்வர் தங்கள் விருப்பந் தெரிந்த பிறகும் இத்தனை காலம் வராமல் தாமதிப்பாரா? இந்நிலைமையில் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தாங்கள் கட்டளையிட்டால் அதைத் தெரிவிக்கிறேன்" என்றார் பழுவேட்டரையர்.

சக்கரவர்த்தி சம்மதம் கொடுத்ததின்பேரில் தனாதிகாரி தெரிவித்தார். "இலங்கைச் சிம்மாதனத்தைக் கவர்ந்து முடி சூட்டிக்கொள்ளச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளை பிறப்பித்து அனுப்புவோம். அத்தகைய கட்டளையைப் பூதி விக்கிரம கேசரி தடை செய்ய முடியாது. அன்றியும், இளவரசரிடம் நேரில் எப்படியேனும் கட்டளையைச் சேர்ப்பிக்கச் செய்துவிட்டால் இளவரசர் கட்டாயம் வந்தே தீருவார்!"

இதைக் கேட்ட சுந்தர சோழர் புன்னகை புரிந்தார். விசித்திரமான யோசனைதான் ஆயினும் ஏன் கையாண்டு பார்க்கக் கூடாது? பொன்னியின் செல்வனைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் சக்கரவர்த்தியின் மனதில் பொங்கிக் கொண்டிருந்தது. தம்முடைய அந்திய காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாக அவர் உணர்ந்தார். ஆகையால் தம் அந்தரங்க அன்புக்குரிய இளங்கோவிடம் இராஜ்யத்தைப் பற்றித் தம் மனோரதத்தை வெளியிட விரும்பினார். மதுராந்தகனுக்கே தஞ்சாவூர் இராஜ்யத்தை அளிக்க வேண்டும் என்ற தம் விருப்பத்தை அறிந்தால் அருள்மொழிவர்மன் மறுவார்த்தையே பேசாமல் அதை ஒப்புக்கொள்வான். பின்னர் அவன் மூலமாக ஆதித்த கரிகாலனுடைய மனத்தை மாற்றுவதும் எளிதாயிருக்கும்.

இவ்வாறு சிந்தித்துத் தனாதிகாரியின் யோசனையைச் சக்கரவர்த்தி ஆமோதித்தார். அதன் பேரில்தான் அருள்மொழிவர்மரைச் சிறைப்படுத்தி வரும்படி கட்டளை அனுப்பப்பட்டது. இளவரசருக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படக் கூடாது என்ற கண்டிப்பான கட்டளையும் மரக்கலத் தலைவனுக்குப் பிறப்பிக்கப்பட்டது.

மேற்கூறிய கட்டளையுடன் இருமரக்கலங்கள் ஈழ நாட்டுக்குச் சென்ற பிறகு, பெரிய பழுவேட்டரையர் சிறிது மனக்கவலை கொண்டார். இளவரசருக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால் தனக்குப் பெரும் பழி ஏற்படும் என்பதை உணர்ந்தார். ஆகையால் தாமே நாகப்பட்டினம் துறைமுகத்துக்கு நேரே சென்றிருந்து, இளவரசரைத் தக்கபடி வரவேற்றுத் தமது சொந்தப் பொறுப்பில் அவரைத் தஞ்சாவூருக்கு அழைத்துக் கொண்டு வர விரும்பினார்.

இந்த யோசனைக்கு இன்னும் சில உபகாரணங்களும் இருந்தன. இளவரசர் தஞ்சைக்கு வந்து சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு முன்னால் செம்பியன்மாதேவியோ, குந்தவையோ அவரைப் பார்க்கும்படி விடக்கூடாது. அந்தப் பெண்கள் இருவரும் இளவரசர் மீது மிக்க செல்வாக்கு உள்ளவர்கள் பழுவேட்டரையரை வெறுப்பவர்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## முட்டையும் வாக்குறுதியும்



ஜிம், ஜாக் ரெண்டு பேருமே இரட்டையர்கள். இருவரும் விளையாடுவதில் தொடங்கி என்ன செய்தாலும் ஒன்றாகத்தான் செய்வார்கள். அதைப் பார்த்து அவங்களோட அம்மாக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் இந்த ஒரு விடயம் மட்டும் அவங்களுக்கு பிடிக்கவே இல்லை.

இருவரும் மரத்தில் ஏறி, பறவைகளின் முட்டைகளை திருடி கொண்டு வந்து வீட்டில் வைப்பதை ஒரு பொழுது போக்காக வைத்து வந்தார்கள். இது அவங்க அம்மாவிற்கு சுத்தமாக பிடிக்கவில்லை, பல முறை சொல்லியும் அழகான சின்ன சின்ன குருவிகளின் முட்டைகளை திருடி கொண்டு வந்து சேர்த்தார்கள். அதை வைத்து சந்தோசப்படும் போதெல்லாம் அவர்களின் அம்மா, இப்படியே செய்தால் பறவைகளே இல்லாமல் போய்விடும் அதை கொடுத்துவிடுங்கள் என்று பலமுறை சொல்லியும் அவர்களுக்கு அந்த சின்ன குருவிகளிடம் இருந்து திருடுவது நன்றாக இருந்தது.

அம்மா இதற்கு ஒரு முடிவு கட்ட நினைத்து, அவர்களுக்கு அழகான கண்ணாடிகளால் ஆன கோலிக்கா (மார்ப்பிள்ஸ்) வாங்கி கொடுக்க முடிவு செய்தார். அதற்கு பதிலாக ஜிம், ஜாக் இருவரும் பறவைகளின் முட்டைகளை திருடக்கூடாது என சத்தியம் வாங்கி கொண்டார்.

கடையில் இருந்து மிகவும் அழகான 8 கோலிக்காவை வாங்கி கொண்டு வீட்டிற்கு வந்தார்கள். அதன் உள்ளே உற்றுப்பார்த்தால் பல விதமாக டிசைன்கள் தெரிய, அதை தனது பள்ளி நண்பர்களுக்கும் காண்பித்து மகிழ்ந்தார்கள். பலரும் அதை கொடுத்தால் இனிப்பு, சாக்லேட், பொம்மை தருகிறேன் என சொல்லியும் இருவரும் அதை கொடுக்க மறுத்து அதை பொத்தி பொத்தி வைத்துக் கொண்டார்கள்.

அப்படியே இருவரும், முட்டைகளை திருடுவதை மறந்தும் போனார்கள். இருவரும் கொடுத்த வாக்கை பின்பற்றுகிறார்கள் என அம்மாவும் மகிழ்ச்சியில் இருந்தார். அன்று ஒரு நாள் பள்ளியில் இருந்து திரும்பி வீட்டுக்கு வர, ஜிம் ஒரு பழைய வீட்டின் பொந்தில் அழகான சிட்டுக் குருவி வெளியில் வருவதை பார்த்தான். ஜாக், கண்டிப்பாக அதில் முட்டை இருக்கும் வா, போய் பார்க்கலாம் என சொல்ல இருவரும் அதை பார்த்தால் உள்ளே 3 முட்டைகள் இருந்தது.

உடனே ஜிம் அதை எடுக்க, ஜாக் நாம் அம்மாவிற்கு வாக்கு கொடுத்துள்ளோம். இதை நாம் செய்யக் கூடாது என்று சொல்லியும் கேட்காமல் ஜிம் அதை எடுத்து கையில் பார்த்தான். இருவருக்கும் முட்டையின் மேல், ஆசை வர அப்போது அந்த சிட்டுக்குருவி திரும்பி வந்தது. •

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்து கொண்டால் போதும், அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். ~ ஹேராம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மீண்டும் பிரதமராக மோடி சாதகமாகப் பயன்படுத்துங்கள்

இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் மூன்றாவது தடவையாக நரேந்திர மோடி அவர்கள் இந்தியப் பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது, பாரதிய ஜனதாக் கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்ததாயினும் 2024 இல் அந்தக் கட்சி தனது கூட்டணிக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைக்கப் போவது இங்கு குறிப்பிடத்தக்கது.

எதுஎவ்வாறாயினும் பாரத தேசத்தின் பிரதமராக நரேந்திர மோடி அவர்கள் பதவியேற்கவுள்ளார் என்பது உறுதியாயிற்று.

இந்தியாவிலுள்ள அத்தனை எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர்ந்து 2024 பொதுத் தேர்தலை எதிர்கொண்டபோதிலும் அந்தப் பலத்தை முறியடித்து நரேந்திர மோடி அவர்கள் பிரதமராக மூன்றாவது தடவையும் பதவியேற்கவுள்ளமை இங்கு குறித்துரைக்கக்கூடியது.

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி அவர்கள் பதவியேற்பது ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு சாதகமான சூழமைவென்றே கூறவேண்டும்.

ஏனெனில் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த முதலாவது இந்தியப் பிரதமர் என்ற பெருமைக்குரியவர்.

தவிர, ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடியவர். இந்தியாவை நம்புங்கள் என்று உறுதிமொழி தந்தவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கைத் தமிழ் மக்களை இந்தியா கைவிடாது எனப் பகிரங்கமாகக் கூறியவர்.

இவற்றுக்கும் மேலாக, இலங்கையில் நீடித்துவரும் இனப்பிரச்சினை தொடர்பில் பிரதமர் மோடி நன்கு அறிந்துள்ளார்.

எனவே தொடர்ச்சியாக அவர் பிரதமராக இருக்கும்போது எமது இனப்பிரச்சினைக்கான தீர்வை அவர் மூலமாக வலியுறுத்துவது இலகுவானதாக இருக்கும்.

அதேநேரம் மூன்றாவது தடவையாகப் பிரதமர் பதவியை ஏற்கவுள்ள பிரதமர் மோடி, இந்திய தேசத்தை உலகின் முதற்தர வரிசையில் நிறுத்துவார் என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் உலக நாடுகளை இந்தியாவின் நட்பு நாடுகளாக ஆக்குவதில் பிரதமர் மோடி தீவிரம் காட்டுவார்.

சுருங்கக்கூறின் இந்துமா சமுத்திரத்தில் இந்திய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதில் அவர் உறங்கப்போவதில்லை என்பது சர்வ நிச்சயம்.

எனவே தனது அண்டை நாடான இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்பதில் பிரதமர் மோடி உறுதியாக இருப்பார் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

ஆகையால் நம் தமிழ் அரசியல் தரப்புகள் பிரதமர் மோடியுடன் ~ பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலையுடன் ஒரு நல்ல தொடர்பாடலை ஏற்படுத்தி அதனூடு இந்திய மத்திய அரசை ~ பிரதமர் மோடியை எமக்குச் சாதகமாக்க வேண்டும்.

இதை நாம் செய்யாது விடுவோமாயின், எமது நிலைமை படுமோசமாகும் கவனம்.

# பொருளாதார மீட்சிக்கான சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

பொருளாதார மீட்சிக்காக எதிர்வரும் காலங்களில் கொண்டுவரும் சட்டமூலங்களுக்கு எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். தற்போதைய பொருளாதார நெருக்கடி எதிர்காலத்தில் தோற்றம் பெறக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது எதிர்க்கட்சியின் உறுப்பினர் புத்திக பதிரன முன்வைத்த கேள்விகளுக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள மறுசீரமைப்புகள் தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் புத்திக பதிரன அவதானம் செலுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது.

மறுசீரமைப்புகள் தொடர்பில் அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்துள்ளது. இவ்விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை உரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

மறுசீரமைப்புகளை கருத்திற்கொண்டு கடந்த காலங்களிலும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இவற்றுக்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நாட்டுக்கு எதிரான சட்டங்களை அரசாங்கம் விரைவாக கொண்டு வருகிறது. நாட்டுக்கு தேவையான சட்டங்களை கொண்டு வருவதில்லை என்று எதிர்க் கட்சியினர் குறிப்பிடுவது முறையற்றது.

நாட்டுக்கு எதிராக எவ்வித சட்டமூலங்களும் கொண்டுவரவில்லை. நாட்டுக்குத் தேவையான சட்டங்களே இயற்றப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களிலும் நாட்டுக்கு தேவையான சட்டமூலங்கள் கொண்டுவரப்படும். எதிரணியினர் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி எதிர்காலங்களிலும் தோற்றம் பெறாத வகையில் மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்படும். உரிய சட்டமூலங்களும் எதிர்வரும் நாட்களில் கொண்டுவரப்படும் என்றார். (ம-7,10)

# வடக்கில் பெண் ஆசிரியர்

## ஒருவரது நியமனம் மீளப்பெறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண நிர்வாகத்தின் அசண்டயீனம் காரணமாக கடந்த மாதம் பல கனவுகளுடன் ஆசிரியர் நியமனம் பெற்ற பெண் ஆசிரியர் ஒருவரின் நியமனம் மீளப் பெறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வடக்கில் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ் தந்தை செல்வா கலை அரங்கில் இடம்பெற்றது.

குறித்த வைபவத்தில் ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட நியமனம் மீளப்பெறப்பட்ட சம்பவம் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில்தெரியவருவதாவது, அண்மையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 400க்கும் மேற்பட்ட பட்டதாரிகளை ஆசிரியர் நியமனத்துக்கு உள்வாங்குவதற்கான நேர்முகத்தேர்வு இடம்பெற்றது.

இவ்வாறு நேர்முகத் தேர்வு இடம்பெற்ற நிலையில் புள்ளிகள் வெளியிடப்படாமல் நியமனத்துக்கு உள்வாங்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

இவ்வாறு வெளியிடப்பட்ட பெயர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் பட்டதாரி ஒருவரும் ஆசிரியர் நியமனத்திற்கு உள்வாங்கப்பட்டார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது.

இதன் போது நியமனம் கிடைத்த பெண் ஆசிரியர் ஒருவரின் நியமனத்தை தவறான நியமனம் எனக் கூறி அவரது நியமனம் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் மீளப் பெறப்பட்டுள்ளது.

(ம-7,10)

# பல்கலை அனுமதிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 14ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை கோருவதற்கு பல்கலைக் கழக மானியங்கள்ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு, பல்கலைக்கழக சேர்க்கை கையேடு ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற இணையத்தளத்திலிருந்து மட்டுமே கிடைக்கும்.

மற்ற வருடங்களில்இதே கையேட்டை அச்சடித்து சந்தையில் வாங்கலாம் ஆனால் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இம்முறைஅச்சிட முடியவில்லை.

விண்ணப்பத்தில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால், அதற்கு மேலும் மூன்று வார கால அவகாசம் அளிக்கப்படும், அதாவது ஜூலை 19ஆம் திகதி வரை விண்ணப்பதாரர்கள் ஒரு முறை மட்டுமே திருத்தங்களைச் செய்ய முடியும்.

ஆகஸ்ட் கடைசி வாரம் அல்லது செப்டம்பர் முதல் வாரத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் மாணவர் சேர்க்கைக்கான குறைந்தபட்ச Z மதிப்பெண்களை வெளியிடவும் ஆணையம் திட்டமிட்டுள்ளது. (ம-7,10)

# மகனை கொடூரமாக தாக்கிய தந்தை கைது

04 வயதுச் சிறுவனை கொடூரமாகத்தாக்கிய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட, 4 வயது சிறுவன் தாக்கப்படும் காணொளி தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிஓயா, சம்பத்நுவர, கல்யாணபுர கிராமத்தில் அண்மையில் சிறு பிள்ளையின் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்திய சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான குகுல் சமிந்த அல்லது பிபிலே சமிந்த நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை (05) அதிகாலை புல்மோட்டை அரிசிமலை பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான 45 வயதுடைய பிபிலே சமிந்த என்ற குகுல் சமிந்த என்பவரும் 37 மற்றும் 46 வயதுடைய இரு பெண்களுமே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் வெலிஓயா கல்யாணபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் தாக்கப்பட்ட சிறுவன் பொலிஸாரின் பொறுப்பில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

(ம-7,10)

# சாரதிகளின் இடமாற்றம் தொடர்பான அறிவிப்பு

வடக்கு மாகாண இணைந்த சேவையிலுள்ள சாரதிகளின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ரூபினி வரதலிங்கத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தலில்,

தற்காலிகமாக இடை நிறுத்திவைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண இணைந்த சேவை சாரதிகளின் இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்துமாறு தற்போது பணிப் புறக்கணிப்பில் ஈடுபடும் வடக்கு மாகாண அரச சாரதிகளின் சங்கத்தின் கோரிக்கை தொடர்பில், இவ்விடமாற்றத்தினை 01.07.2024ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் அவர்களினால் வழங்கப்பட்ட உடன்பாட்டிற்கமைய வடக்கு மாகாண சபையின்அனைத்து திணைக்களங்களுக்கும் இவ்விடயம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்பில்பணிப்புறக்கணிப்பில்ஈடுபடும்வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்திற்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி – பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

07

**2. கோப்பிச் செய்கைக்கு வேண்டிய கூலியாட்கள்:**

1833 இல் இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதாயினும் கோப்பி முதலாளிகள் எதிர்பார்த்த தொழிலாளரின் இடப்பெயர்ச்சி நடைபெறவில்லை. பணத்தின் பயன்களை இன்னும் உணராத விவசாயிகள், தத்தம் சிறு நிலத்துண்டுகளைப் பயிரிட்டுச் சீவியத்தைக் கழித்து வந்தனரேயன்றி, கூலிக்குப் பிழைக்கும் வாய்ப்புக்களை அறவே புறக்கணித்தனர்.

சிங்களர் தமது நிலையை விருத்தி செய்வதற்காகப் பணத்துக்குச் சேவை செய்ய முன்வருவர் என எதிர்பார்த்த ஆங்கிலேயருக்குச் சிங்களவரின் செயல் பெரும் ஏமாற்றமாக முடிந்தது. விசேடமாகக் கண்டிப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள், ஆங்கிலத் துரைமாரின் தோட்டங் களில் கூலிக்குப் பிழைக்க விரும்பவில்லை.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பித்த காலத்தில் காடுகளை வெட்டித் துப்பரவு செய்தல், களை பிடுங்குதல், கோப்பி விதைகளைப் பறித்தல், ஏற்றுமதிக்குத் தயார் செய்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்குக் குறைந்த செலவில் கூலியாட்களைப் பெற வேண்டிய தேவை ஏற்பட்டது. அதிடஷ்டவசமாகத் தென்னிந்தியச் சந்தைகள் தோட்டத் துரைமாரின் இத்தேவையை ஈடு செய்ய முன் வந்தன.

தென்னிந்தியாவில் குடிசனத் தொகை பெருகி வந்ததனாலும், மழையில்லாக் காலங்களில் பஞ்சம் ஏற்பட்டதனாலும் மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காகப் பிறநாடுகளுக்குக் கூலியாட்களாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்காலத்தில் மேற்கிந்தியத் தீவுகள், பசுபிக் தீவுகள், நேட்டால், மலாயா, இலங்கை எனும் குடியேற்ற நாடுகளில் தேவைப்பட்ட தொழிலாளரை ஐரோப்பியர் தென்னிந்தியாவிலேயே திரட்டினர்.

இலங்கை தாயகத்துக்கு அண்மையில் இருந்தமையினாலும், தம் நாட்டிலுள்ள நிலைகளே இங்கும் காணப் பட்டமையினலும், தம் மனைவி மக்களுடன் இடம்பெயர வசதிகள் இருந்தமையினாலும் பெரும்பாலான கூலியாட்கள் இந் நாட்டுக்கு விரும்பி வந்தனர்.

தோட்டங்களுக்குத் தேவையான தென்னிந்தியரைத் திரட்டி இலங்கைக்குக் கொண்டு வர உதவி செய்தவர்கள் கண்காணிகளாவர். தோட்டத்துரைமார் தமக்குத் தேவையான தொழிலாளரைத் திரட்டி வருமாறு கண்காணிகளுக்குப் பணம் கொடுத்துத் தென்னிந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களும் தம் கிராமங்களிலுள்ள உறவினரையே வரவழைத்து வந்தனர். இதனால் ஒரு நன் மையும் விளைந்தது. குடும்ப உறவுகளினாலும் இரத்த பாசத்தினாலும் பிணைக்கப்பட்ட ஒரு தோட்டத்தின் தொழிலாளர், தம் உழைப்புக்களுடன் காலத்துக்குக் காலம் தாயகம் செல்லாது இங்கேயே நிரந்தரமாக வாசஞ் செய்தனர்.

இவர்கள் மதுரை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்,சேலம். கோயம்புத்தூர், திருநெல்வேலி எனும் மாவட்டங்களில் இருந்தே பெரும்பாலும் திரட்டப்பட்டனர்.

இலங்கைக்கு வர உடன்பட்டவர்கள், கிராமங்களினின்று நூற்றுக் கணக்கான மைல்களைக் கால் நடையாக நடந்து, தென்னிந்தியாவின் கரைத் துறைமுகங்களை அடைந்தனர். அங்கிருந்து அவர்கள் புராதன காலத்துக் கப்பல்களில் வட இலங்கையின் துறைமுகங்களில் இறக்கப்பட்டனர்.

அதன் பின் உலர் வலயத்தின் பல நூற்றுக் கணக்கான மைல்கள் நடந்து, தோட்டப் பிரதேசங்களைப் போய்ச் சேர்ந்தனர். தோட்டங்களை அடைந்த கூலியாட்கள், அங்கு "லயின்கள்" என்றழைக்கப்பட்ட நீண்ட பதிந்த, பத்து அறைகளைக் கொண்ட கட்டடங்களில் வாழ்ந்தனர். ஓர் அறையில் ஒரு முழுக் குடும்பமே வசித்தது. இவ்விருப்பிடங்கள் பெரும்பாலும் சுகாதார வசதிகளற்றன வாகவும், சௌக்கியக் குறைகள் மிகுந்தனவாகவும் காணப்பட்டன.

ஆனால் படிப்படியாகத் தோட்டத் துரைமார் இக்கூலியாட்களை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். அரசாங்கமும், வந்திறங்கும் துறைகளில் வைத்திய வசதிகளையும், ஏனைய சௌகரியங்களையும் செய்து கொடுக்க முன் வந்தது. தனியாரினதும், அரசாங்கத்தினதும் முயற்சிகளினால் கூலியாட்களின் வருகை 1850 இற்கு பின் துரிதமாக அதிகரித்தது.

தோட்ட முதலாளிகள் தமக்குத் தேவையான கூலியாட்களைத் திரட்டவும், அவர்களை வேலைக்கமர்த்தவும், சம்பளங்கள் கொடுக்கவும் கண்காணிகளையே உபயோகித்தமையினால், இம் முறை "கண் காணி முறை" [illegible]

தோட்டங்களில் கூலியாட்கள், மேற்பார்வையாளர் போன்று விளங்கிய கண்காணியின் கீழ் குழுக்களாக வேலை செய்தனர். கூலியாட்களின் மொழியையும் பழக்க வழக்கங்களையும் அறியாத தோட்டத் துரைமார், மேற்பார்வையையும் சம்பளம் கொடுப்பதையும் கண் காணிகளின் பொறுப்பிலேயே விட்டனர்.

ஒன்றுமறியாத கூலியாட்கள், தமது கொடுக்கல் வாங்கல் கருமங்களை அவனிடமே ஒப்படைத்தனர். கூலியாட்களின் சம்பளங்கள், சகாயப் பணம், ஆண்டிறுதி நன் கொடைப்பணம் கடன்கள் கொடுத்தல் எனும் சகல பண நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாளியாக விருந்த கண்காணி, தோட்டத்தில் பெரும் செல்வந்தனாகவும் செல்வாக்குடையவனாகவும் ஆனான்.

தோட்டத் துரைமாருக்கு கூலியாட்கள் மேலும் தேவைப்படின், அவர்கள் இக்கண்காணிக்கு முற்பணம் கொடுத்துத் தென்னிந்தியாவுக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவன், கூலியாள்களைத் திரட்டி, அவர்களுக்குச் சொற்ப முற்பணம் கொடுத்து, வழியில் ஏற்படும் செலவுகளைப் பொறுத்து தோட்டத்தில் கொண்டு வந்து, தானே அவர்கள் பட்ட கடன்கள் யாவற்றுக்கும் பொறுப் பேற்றான். இம் முதற் கடன் தீர்க்கப்படும் வரை எந்தக் கூலியாளும் தோட்டத்தை விட்டு விலகலாகாதென தொழிற் சட்டங்கள் விதிக்கப்பட்டன.

குறிப்பு- 1824 இல் மலைப் பகுதியில் கோப்பி பயிரிடத் தொடங் கினர். ஜார்ஜ் பேர்ட் என்ற ஆங்க லேயர் இப்பகுதியில் கோப்பியும் கொககோவும் பயிரிடும் தோட்டங்களை உருவாக்கினார். இதை அடுத்து வேறு சில ஆங்கிலேயர்களும் மலைத் தோட்டங்களை உருவாக்கினர். தென்னிந்தியாவினின்று கோப்பித் தோட்டங்களில் கூலி வேலைக்கு இந்தியரை முதன் முதலாக வரவழைத்தவர்கள் ஜோஜ் பேட்டும். ஆள்பதி பாண்ஸ்மாவர். 1828 இல் தோட்டங்களில் இருந்த இந்தியரின் எண்ணிக்கை 10, 000 ஆகும். 1847 இல் இவ் வெண்ணிக்கை 80,000 ஆயிற்று.

### பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு போக்குவரத்து வசதிகள்

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறையின் விருத்தி, உள் நாட்டுப் போக்கு வரவு முறைகளில் ஒரு புரட்சிகரமான மாற்றத்துக்கு வழி வகுத்தது. கோப்பியின் உற்பத்தியும், வாணிகமும் பன் மடங்கு பெருகியதனால் கோப்பியைத் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்வதற்கும், தோட்டங்களுக்குத் தேவைப்பட்ட பொருள்களைத் திருப்பிக் கொண்டு வருவதற்கும் தரைமார்க்கமாகக் கெதியான போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதனவாயின.

இலங்கையின் முதல் தெருக்கள் அமைக்கப்பட்ட வரலாறு பகுதி IV இல் கூறப்பட்டது. 1840 ஆம் ஆண்டுக்குப் பின் கோப்பியின் வேகப்போக்கு உச்சநிலையைத் தொடவே, புதுத் தோட்டப் பிரதேசங்களுக்கு மேலும் தெருக்களை அமைத்தல் இன்றியமையாததெனச் சகலரும் உணர்ந்தனர். அரசாங்கம் கொள்கையளவில் தோட்ட முதலாளிகளின் இவ்வுறுதிக் கேள்வியை மறுக்கவில்லை. ஏனெனில் முடிக்குரிய நிலங்களை விற்ற அரசாங்கம், அவற்றிற்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கடமைப்பாடுடையதென்பதை நன்கு உணரலாயிற்று. சொற்ப காலத்தினுள் வேண்டப்பட்ட தெருக்களின் எண்ணிக்கையும், அதற்குத் தேவையான பணமும் அரசாங்கத்தை மலைக்கச் செய்தது.

இது தவிரவும் புதுப்பாதைகள் செங்குத்தான மலைகளையும், வளைவுகளையும், பல நதிகளையும், ஊடறுத்துச் செல்ல வேண்டியிருந்தமையினால் செலவும் கடினமானதாயிருந்தது. கோப்பிச் செய்கையினால் நிறைந்த வருவாயைப் பெற்ற அரசாங்கம், செலவுகளைப் பொருட்படுத்தாது உடனடியாக மலைநாட்டில் புதுத் தெருக்களை அமைக்கத் திட்டமிட்டது. ஆள்பதி ஹோட்டன், கொழும்பு கண்டி வீதியை, பதுளை வரை நீட்டிவித்தார். பேராதெனியாவிலிருந்து நுவரெலியா நோக்கி ஆரம்பிக்கப்பட்ட கிளை முழுத்தோட்டப் பிரதேசங்களையும் சுற்றி வட்டமிட்டுச் சென்று பழைய பாதையுடன் இணைந்தது.

### நாட்டின் நிர்வாக வசதியின் பொருட்டு அமைக்கப்பெற்ற தெருக்கள் :

கோல்புறூக் சீர்திருத்தங்கள் முழுத்தீவுக்கும் ஒற்றையாட்சி முறையினைப் பெற்றுத்தந்ததன் விளைவாக, நாடெங்கும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டினை நிலைபெறச் செய்தற்கு இலகுவானதும், கெதியானதுமான போக்குவரத்து வசதிகள் இன்றியமையாத தேவைகளாயின. நிர்வாக வசதியை முன்னிட்டுச் செய்ய வேண்டியிருந்த முதல் வேலை, தீவின் பிரதான நகரங்களை தலை நகருடன் இணைப்பதேயாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலை...

பங்களுக்கு மற்றொரு இழப்பீடு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இறுதிச் சடங்குகளுக்காக 25,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## கனடா செல்ல...

விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்.

விமான அனுமதியை முடித்துவிட்டு குடிவரவு கவுண்டருக்கு வந்து அங்கு பணிபுரியும் குடிவரவு அதிகாரியிடம் பாஸ்போர்ட்டை வழங்கினார்.

கடவுச்சீட்டில் உள்ள புகைப்படத்திற்கும் அவரது புகைப்படத்திற்கும் வித்தியாசம் காணப்பட்டதால், இந்தக் கடவுச்சீட்டைப் பற்றிய கூடுதல் தகவல்களைக் கண்டறியும் வகையில், குடிவரவுத் திணைக்களத்தின் கணினி அமைப்பில் கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளிடப்பட்டுள்ளன.

இந்த கடவுச்சீட்டை வைத்திருப்பவர் நாட்டை விட்டு வெளியேற தடை விதித்து திருகோணமலை நீதிமன்றம் தடை விதித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அங்கு, இந்த இளைஞனின் சூட்கேஸில் அவரது உண்மையான தேசிய அடையாள அட்டை கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு அவர் குடிவரவு அதிகாரிகளிடம் அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்தினார்.

கனடா சென்ற பின்னர் அனுராதபுர நகரத்தில் உள்ள தரகருக்கு ஒரு கோடியே முப்பது இலட்சம் ரூபாயை தருவதாக உறுதியளித்து கனடாவில் செல்லுபடியாகும் விசா உள்ள இந்த கடவுச்சீட்டை கொடுத்ததாக இந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்த இளைஞனை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர். (ம-7,10)

## இளம் பெண்...

டுள்ளது.

உயிரிழந்தவர் புங்குடுதீவு மடத்து வெளி எட்டாம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதுடைய சிவகுகானந்தன் சிந்துயா என்பவரா வார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33)

## அத்தியாவசிய...

எது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் குறித்த அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள் எது.

இதேவேளை வைத்தியசாலைகள், மருந்தகங்கள் உள்ளிட்டவையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## இலங்கையுடன்...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கு நன்றிகளையும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடமிருந்து "X" தளம் ஊடாக அனுப்பிய செய்திக்கு பதிலளித்த மோடி, "இந்தியா - இலங்கை பொருளாதார கூட்டுறவில் எங்களது தொடர்ச்சியான ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## தியாகி...

தமிழ்த் தேசத்தின் வரலாற்றில் மாணவப் போராளியாகப் போராடி தன்னுயிர் நீத்த முதல் தற்கொடையாளன் தியாகி பொன்.சிவகுமாரனின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்.பல்கலையில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுநினைவுத் தூபியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ம-7,10,33)

## 2ஆவது...

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் இரண்டாவது பொதுச்சபைக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

அதில், இதுவரை வடக்கு-கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், "தமிழ் மக்கள் பொதுச் சபை" என அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயற்படுவது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. (ம-7,10)

## பொருளாதார...

டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன் நாட்டின் அரசியலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

முதன்முறையாக அரசியலில்லாத அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

தற்போது மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தாலும் நாடு இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடவில்லை.

எனவே அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

## தமிழ்ப்...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள இரா. சம்பந்தன் இல்லத்தில் அவரை சந்தித்தது.

கொழும்பு அரசியல் நிலைமைகள், ஜனாதிபதித் தேர்தல்கள் போன்றவை குறித்தும், தமிழர்களின் அரசியல் பிரச்சினைகள் பற்றி விரிவாகவும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டம் குறித்து ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் சம்பந்தனிடம் கேட்டனர். "அது பிரயோசனமற்ற திட்டம் என்பதே எனது கருத்து. தமிழர்கள் தங்கள் அபிலாஷைகள் - எதிர்பார்ப்புக்கள் - யாது என்பதை கடந்த எழுபது வருடங்களாகவே தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர். அதில் எந்த ஐயுறவும், சந்தேகமும் இல்லை. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு தங்களுக்குரியது என்பதை உறுதியாகவும் தெளிவாகவும் அவர்கள் தடையின்றி தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். இலங்கை அரசு தான் ஏற்று தனது அரசியலமைப்பில் அடக்கிய விடயங்களைக்கூட அது நடைமுறைப்படுத்த மறுத்து நிற்கின்றது. சர்வதேச சமூகம் இவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்பதில் அர்த்தமில்லை. இத்தகைய போக்குக்கு முடிவு கட்டி, தமிழர்களுக்கு நீதி, நியாயமான தீர்வு கிட்டுவதற்கு சர்வதேச சமூகம் நியாயமான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு இவ்வாறு சம்பந்தன் இந்தச் சந்திப்பின்போது எடுத்துரைத்தார். (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 5495 — R 7 1 9 4 8 4
அத சம்பத — R 9 4 8 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0070 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 1525 — I 22 38 69 70 I — Double Chance 30082

மெகா பவர் — திகதி 05/06/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1843 — I 11 12 61 75 76 — 64883

லக்கி 7 VIP — திகதி 2024.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 321 — V 1 9 7 6 4 1 V

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3737 — சீட்டிழுப்பு திகதி 05.06.2024 — N 33 44 52 77 — N 52588

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0804 — மகரம் 15 20 25 40 மகரம் — 66696 — 30

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் தன சம்பத — 05.06.2024 — வெற்றி வாரம் 203 — வர்ணம் பச்சை — E 7 3 3 6 4 8 — 33582 — அடுத்த சுப்பர் ஜக்பொட் 23,414,696.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2469 — வர்ணம் சிவப்பு — 05.06.2024 — 18 20 45 51 K — 40364 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,768,537.60 — DLB

சனிதா — திகதி 2024.06.05 — வெற்றி வாரம் 4630 — 37 41 47 74 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,731,017.60 — 50964 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4181 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.06.05 — தினம் புதன்கிழமை — 11 12 33 47 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,376,518.00 — 305216 — DLB

B 22 02 54 71 73 — 1645 — 05.06.2024 புதன்கிழமை — 221835 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 526,036,449.40 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.06.05 — வெற்றி வாரம் 2031 — வர்ணம் மஞ்சள் — 03 05 30 36 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,756,328.00 — 66478 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2295 — சீட்டிழுப்பு திகதி 2024.06.05 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 117,846,719.20 — 06 25 57 69 R — 104616 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1112)

076 825 7716 (ஆகாஸ்)


# மண்மேடு விழுந்ததில் குழந்தை பலி

கேகாலை, மாங்களகம, குருந்திய வராஹேன கிராமத்தில் வீடொன்றுக்கு அருகாமையில் மூன்றரை வயதுக் குழந்தையின் மீது மண்மேடு விழுந்ததில் அக்குழந்தை உயிரிழந்துள்ளது. கவிந்து ஷெஹந்தா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

வீட்டின் பின்புறத்தில் பாதுகாப்பான பக்கச்சுவர் அமைப்பதற்காக காலை முதல் கரை வெட்டப்பட்டிருந்ததாகவும், அங்கு விளையாடிக் கொண்டிருந்த போது குழந்தையின் மீது மண்மேடு விழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அயலவர்களின் உதவியுடன் குழந்தையை மீட்டு கேகாலை போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் குழந்தை உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7,10)

## நயினை...

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய குரோதி வருஷ மஹோற்சவ பெருவிழா நாளைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாக பதினாறு தினங்கள் இடம்பெறவுள்ள உயர்திருவிழாவில் எதிர்வரும் 19.06.2024 ஆம் திகதியன்று சப்பரத் திருவிழாவும்,20.06.2024 திகதியன்று இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை கங்காதரணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.(ம-7,10)


## மணப்பெண் தேவை

- யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1984, சுவாதி, BSc, Business Management, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1988, சதயம், MSc Engineering, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருகோணமலை, இந்து, கௌரவகுலம், 1984, ரேவதி, qualified draftsman, vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரம்பன், Jaffna town, இந்து, கௌரவகுலம், 1988, ரோகிணி, BSc Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மண்டைதீவு, இந்து, கௌரவகுலம், 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34944
- கோண்டாவில், இந்து, கௌரவகுலம், 1990, ரேவதி, Phd in Engineering, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1988, உத்தரம், BSc Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1987, புனர்பூசம், BSc Engineering (civil), Singapore citizen, vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 32553

(1115)

S.Sharma J.P Astrologer | - 077 539 3728 | - 077 803 8193

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER
- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (C-0535) (ஆங்கில அறிவு அவசியமானது)

V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## பணியாளர் தேவை

பொதிகள் சேவை நிறுவனத்திற்கு கணனி அறிவுடைய பணியாளர்கள் உடன் தேவை. (கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மன்னார், யாழ்ப்பாணம்) (1118)

Whatsapp : 070 375 0001

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 28 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(1116)

(குரு) 077 029 4164, 077 329 4130, 077 294 1521


# மரண அறிவித்தல்



## சபாபதி நவரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் சரவணபவானந்த வித்தியாலயம் கோப்பாய், முன்னாள் தலைவர் வலி கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி)

வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி நவரத்தினம் அவர்கள் 05.06.2024 இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.06.2024) இன்று வியாழக்கிழமை பி.ப 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"குமரகோட்டம்",
மானிப்பாய் வீதி,
கோப்பாய்.

தகவல்:
மகன் ந.சண்முகதாசன்
(ஆசிரியர் சென்.ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்)

(1117)


அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா? உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம். (C-0535)

V2 TRAVELS 0768226244

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0535)


# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரன் றெஜினாதேவி (அம்பிகா)



பிறப்பு 22.01.1951 | இறப்பு 04.06.2024

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரன் றெஜினாதேவி (அம்பிகா) அவர்கள் (04.06.2024) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - இரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற இராசதுரை - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் இராஜேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் சரவணபவனின் பாசமிகு தாயாரும் சம்யுக்தாவின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, வன்னியசிங்கம், மதியாபரணம், ஜெயசிங்கம் மற்றும் கணேசமூர்த்தி, கல்யாணி, சாந்தினி, சிவகௌரிதேவி, கதிர்காமசேகரம் (மணி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சண்முகாதேவி, சண்முகேஸ்வரன், பரமேஸ்வரன், ஜெகதீஸ்வரன், கலைவாணி, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் திருமதி வன்னியசிங்கம், திருமதி மதியாபரணம், திருமதி ஜெயசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2024) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8/18, முதலி கோவில்
முதலாம் ஒழுங்கை, கொக்குவில்
மேற்கு, கொக்குவில்.

077 162 6178

தகவல்:
குடும்பத்தினர்

(1113)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org